ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 1 ஜனவரி 1996 கானம் : 6

ஸ்ரீ ஹரி :

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

## (தெய்வீக மாதப் பத்திரிகை)


வேணு : 1 ஜனவரி 1996 கானம் : 6


## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர்-2 | 4 |
| 3. | ஸ்ரீ குருஜி - 5 | 8 |
| 4. | யுக தர்ம ஸ்தாபகர்கள் - 6 | 11 |
| 5. | ஸாதனையின் அவசியம் | 16 |
| 6. | தியானம் | 20 |
| 7. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 5 | 24 |
| 8. | செய்திகள் | 30 |
| 9. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



கைசிக துவாதசியன்று (3-12-95) திருமழிசை க்ஷேத்ரத்தில் ஸ்ரீ குருஜியும், பக்தர்களும்

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்

ராகம் : மோஹனம் தாளம் : ஆதி

| | | |
|---|---|---|
| | ஜய ஜய க்ருஷ்ண | ஜய ஜய க்ருஷ்ண |
| | ஜய விஜயீபவ | ஜய ஜய க்ருஷ்ண |
| 1) | வேணு விலோல | ஜய ஜய க்ருஷ்ண |
| | விஜய கோபால | ஜய ஜய க்ருஷ்ண |
| | வ்ரஜயுவ ராஜ | ஜய ஜய க்ருஷ்ண |
| | விஷ்ணு ப்ரியா ஸேவித | ஜய ஜய க்ருஷ்ண |
| 2) | நந்த குமார | ஜய ஜய க்ருஷ்ண |
| | நவநீத ப்ரிய | ஜய ஜய க்ருஷ்ண |
| | நடவர வபு: | ஜய ஜய க்ருஷ்ண |
| | நளின தளேக்ஷண | ஜய ஜய க்ருஷ்ண |
| 3) | ராஸ விலோல | ஜய ஜய க்ருஷ்ண |
| | ரஸிக சிகாமணே | ஜய ஜய க்ருஷ்ண |
| | ராதிகா ஸேவித | ஜய ஜய க்ருஷ்ண |
| | ராஜ கோபால | ஜய ஜய க்ருஷ்ண |
| 4) | புவன ஸுந்தர | ஜய ஜய க்ருஷ்ண |
| | பூதன மர்த்தன | ஜய ஜய க்ருஷ்ண |
| | புண்ய ஸ்லோக | ஜய ஜய க்ருஷ்ண |
| | பவ்ய குணாலய | ஜய ஜய க்ருஷ்ண |
| 5) | முசுகுந்த நாயக | ஜய ஜய க்ருஷ்ண |
| | முனிஜன மோஹித | ஜய ஜய க்ருஷ்ண |
| | மோஹன ஸ்வரூப | ஜய ஜய க்ருஷ்ண |
| | முரளீதர ஸ்ரீ | ஜய ஜய க்ருஷ்ண |

**அட்டைப்படக் காட்சி**

*திருமலை க்ஷேத்ரத்தின் மாட வீதிகளில் நாம ஸங்கீர்த்தனம் பாடி வலம் வரும் ஸ்ரீ குருஜியும் பக்தர்களும்*

# மதுரமான மஹனீயர்-2

ஒரு தாயாருக்கு தன்னுடைய பெண் கல்யாணத்தின் பொழுது, நல்ல வரனாக நம்முடைய குழந்தைக்கு அமைந்துள்ளதே, அவள் புக்ககத்தில் போய் கணவனுடன் சௌகரியமாகவும் சந்தோஷமாகவும் வாழப் போகின்றாள் என்பதை நினைக்கும் பொழுது சந்தோஷமாகவும், அதே சமயம் நாம் பெற்று வளர்த்து இத்தனை நாள் தங்களுடனேயே வாழ்ந்து, தன்னுடைய அன்பினாலும் விளையாட்டுகளினாலும் தங்களை எல்லாம் சுகப்படுத்தி வந்த பெண்ணைப் பிரியப் போகிறோமே என்ற வருத்தமும் இருக்கும் அல்லவா?

அது போல எனக்கு நம்முடைய குருநாதரை உலகம் முழுவதும் தெரிந்து கொள்ள வேண்டும், அநேகம் நபர்கள் அவருடைய ஸங்கத்தை அடைந்து அவருடைய கருணைக்குப் பாத்திரமாகி நாங்கள் அனுபவிக்கும் ஆனந்தத்தை அவர்களும் அடைய வேண்டும் என்று தோன்றும். அதே சமயம் அப்படி அவருடைய ஸங்கம் பெரிய ஸங்கம் ஆகிவிட்டால் இப்பொழுது அவரிடம் இருக்கும் நெருக்கம். நமக்கு குறைந்து விடுமோ? என்ற கவலையும் ஏற்படும்.

நாங்கள் முதல் முதலில் ஸ்ரீ குருஜியை தரிசனம் செய்த பொழுது அவர் எந்த ஸ்தாபனங்களையும் ஏற்படுத்தவில்லை. எப்பொழுதும் அவர் இருக்கும் இடத்தின் கதவு திறந்தே இருக்கும். யாராவது வந்து கொண்டும், போய்க் கொண்டும் பஜனை செய்து கொண்டும் இருப்பார்கள். இப்பொழுது இருக்கும் அளவிற்கு ஸத் ஸங்கம் அப்பொழுது அவ்வளவு பெரியதாக இருக்காது. நாங்கள் ஒரு நான்கு அல்லது ஐந்து குடும்பங்கள் மட்டுமே அவரிடம் ஈடுபட்டிருந்த காலம் அது.

அப்பொழுது போல் அவரால், இப்பொழுது இருக்க முடியவில்லை. ஏன் என்றால், இப்பொழுது **முரளீதர ஸ்வாமிகள் மிஷன், சாந்தீபனி குருகுல டிரஸ்ட், பிருந்தாவனக் கோயில், மதுரபுரி ஆஸ்ரமம், மதுரமுரளி சஞ்சிகை** இதையெல்லாம் தவிர அவ்வப்பொழுது அவர் கொண்டாடும் உத்ஸவங்கள், நித்யபடி பூஜை, உபன்யாசங்கள், பஜனை, அனுஷ்டானம், தர்சனார்த்திகள் என்று பல காரியங்களில் அவர் ஈடுபட்டுள்ளதால் அவருக்கு ஓய்வு என்பதே இல்லை. ராத்திரி அவர் படுத்துக் கொள்ள எப்படியும் இரவு பன்னிரண்டு அல்லது ஒரு மணி ஆகிவிடும். ஆனால் வெளியில், அவரைப் பார்த்தால் அவர் எப்பொழுதும் ஓய்வில் இருப்பதாகவே தோன்றும். எப்பொழுதும் அவருடைய முகத்தில் சாந்தமே இருக்கும். **இதுவே அவர் எந்த காரியத்தையும் பற்று இல்லாமல் செய்வதற்கு அடையாளம்.** எதற்கும் அலட்டிக் கொள்ளவே மாட்டார். எந்த பிரச்னை வந்தாலும், அவரைப் பற்றி புரியாமல் யாராவது வெளியில் தவறாக பேசினாலும், உலகம் என்றால் இதெல்லாம் சகஜம்தான், இதில் என்ன இருக்கிறது என்று சொல்லிவிடுவார்.

அவருக்கு பல காரியங்கள் இருப்பதனாலேயே முன்பு போல் எங்களிடம் நெருக்கமாக இல்லை என்பதைப் புத்தி பூர்வமாக நான் உணர்ந்தாலும், மனது சில சமயம் ஏதோ எங்களிடமிருந்து அவர் வெகு தூரம் விலகி விட்டார் போல் தோன்றும். அப்பொழுது அழுகை அழுகையாக வரும், என்னால் சமாளித்துக் கொள்ளவே முடியாது. அப்பொழுது கூப்பிட்டு மிகவும் அழகாக சமாதானப்படுத்துவார். அவர் சமாதானப்படுத்தும் அழகைப் பார்த்து, அதற்காகவே கோபித்துக் கொள்ளலாம் போல் தோன்றும்.

அவருடைய பிரேமை மிகவும் பொல்லாதது. அவருடன் 2, 3 நாட்கள் உடன் இருந்து பழகியவர்கள், பிறகு வெளியில் போய் இயல்பான நிலைக்கு வருவதற்கே தவிப்பார்கள்.

வெளியூரிலிருந்து தரிசனத்திற்கு வந்து போனவர்கள் ஊருக்கு போய் இயல்பான நிலைக்குத் திரும்ப முடியாமல் தவிப்பதைப் பார்த்திருக்கின்றேன். அவ்வளவு சத்தியம் வாய்ந்தது அவருடைய பிரேமை. திரும்ப நாம், குருநாதர் கூப்பிட்டால் கூட அவருடன் நெருங்கிப் பழகக் கூடாது; ஏன் என்றால் அதைக் காட்டிலும் பிரிவு மிகவும் பயங்கரமாக பாதிக்கின்றது என்று அனைவரும் நினைத்துக் கொள்வார்கள். ஆனால் அவரைப் பார்த்தால் சகலமும் மறந்து விடும்.

ஸ்ரீ குருஜியின் ஸத்ய ஸங்கல்பத்தைப் பற்றிக் கூறுகின்றேன். **ஏதாவது ஒரு கார்யம் செய்ய வேண்டும் என்று சங்கல்பம் செய்து விட்டால் அது நிறைவேறும் விதமே தனி அழகு. அதற்குத் தேவையான அனைத்து சகாயங்களும் ஏற்படும் விதத்தைப் பார்த்தால் மிகவும் ஆச்சர்யமாக இருக்கும்.** அவருக்கு எந்த காரியத்தையும், நினைத்து விட்டால், உடனே முடித்து விட வேண்டும், எதையும் தள்ளிப் போடுவதே அவருக்கு பிடிக்காது.

**சிறு விஷயம் முதல் பெரிய விஷயங்கள் வரை அவருடைய சங்கல்பங்கள் பூர்த்தி ஆகும் விதம் அலாதியானது.** ஸ்ரீ குருஜியிடம் ஆரா அமுதன் என்ற மாத்வ அன்பர் ஒருவர் ஈடுபட்டுள்ளார். அவர் ஸ்ரீ குருஜியின் அந்த நாளைய பக்தர். அவருடைய குடும்பம் மிகவும் சிரம தசையில் இருந்து, ஸ்ரீ குருஜியின் அனுக்ரஹத்தால் இன்று மிகவும் சௌகரியமாக உள்ளது. சுமார் 6 அல்லது 7 வருடங்களுக்கு முன் ஸ்ரீ குருஜியை கும்பகோணத்தில் இருக்கும் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அப்பொழுது அவருடைய தாயார் தங்களுடைய கஷ்டங்களை எல்லாம் ஸ்ரீ குருஜியிடம் கூறினார்கள். ஸ்ரீ குருஜியும் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள். அப்பொழுது ஆராவமுதனின் தாயார் தன்னுடைய திருமாங்கல்யம் தொலைந்து விட்டது; எவ்வளவு நாள் ஆகியும் எங்கு தேடியும் கிடைக்கவில்லை என்று கூறி அழுதார்கள். ஸ்ரீ

குருஜி 'கிடைக்கும், கவலைப்பட வேண்டாம்' என்று கூறி அவர்கள் வீட்டை விட்டு கிளம்பி விட்டார். அவர் தெருவில் சிறிது தூரம் கூட சென்றிருக்க மாட்டார், அமுதனின் தந்தையார் குருநாதரைப் பின் தொடர்ந்து வந்து பல வருடங்களாக தேடியும் கிடைக்காத திருமாங்கல்யம், சமையல் செய்யும் அறையில் நுழைந்தவுடன் கிடைத்துவிட்டது என்று கூறி ஆச்சரியம் அடைந்து அழுதார்கள்.

ஸ்ரீ குருஜிக்கு கும்பகோணத்தில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ ஆராவமுதனிடமும், ஸ்ரீ சாரங்கராஜப் பெருமாளிடமும் ஈடுபாடு அதிகம். **இன்றும் ஒவ்வொரு பங்குனி உத்ரம் அன்று தாயாருக்கும், பெருமாளுக்கும் பட்டு வஸ்திரங்கள் சாத்தி, சந்தோஷப்படுவார்.** ஆகவே ஆராவமுதனை ஸேவிக்கும் ஆசையில் அடிக்கடி கும்பகோணம் சென்று ஆரா அமுதன் வீட்டில் தங்குவார்.

திடீர் என்று ஒரு நாள் மதியம் 2 மணி இருக்கும். இன்று ஊத்துக்காடு ஸ்ரீ கிருஷ்ணருக்கு விசேஷத் திருமஞ்சனம் செய்யப் போகின்றேன் என்றார். அமுதனுடைய தந்தை ஸ்ரீ குருஜியை, இன்று வேண்டாம், இன்னொரு நாள் செய்யலாம். ஏன் என்றால் அந்த கோயிலுக்குப் பட்டர் எப்பொழுதோ தான் வருவார், அவரிடம் நேரில் போய் முன்பே சொல்லிவிட்டுத்தான் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார்.

*(தொடரும்)*

**- ஜெயந்தி ஜானகிராமன்**

---

## இந்த இதழ் புகைப்படங்கள்

*அட்டைப் படம் : ஸ்ரீ ஸ்ரீதர்*
*பக்கங்கள் 2, 31 : ஸ்ரீ கல்யாணகிருஷ்ணன்*

# ஸ்ரீ குருஜி - 5

ஸ்ரீ குருஜியுடன் பேசிக் கொண்டிருந்தபோது, அவர்களின் வாழ்க்கைச் சம்பவங்களைப் பற்றி அவர்கள் வாய் முகமாகக் கூறியவற்றை, தொகுத்து எழுதுவதின் தொடர்ச்சி.

**எஸ். ஜயராம்**

---

**இந்த வடவாம்பலம் ஸ்ரீ ஆத்ம போதேந்திர ஸ்வாமிகளின் அதிஷ்டானம் எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று.**

முதன் முதலாக நான் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது தரிசனம் செய்வதற்காக சென்றேன். எனக்கு அந்த இடம் மிகவும் பிடித்து விட்டதால், அடிக்கடி சென்று வர ஆரம்பித்தேன். அங்கு அமர்ந்து தியானம் பழக ஆரம்பித்தேன்; மிகவும் இருட்டி விட்டது. ஆகவே நாழியாகிறதே என்ற கவலையுடன் வெளியே வந்தால் மழை பிடித்துக் கொண்டு விட்டது. மழை சற்று நிற்கட்டும் என்று உள்ளே சென்று தியானம் செய்ய அமர்ந்தவுடன் மழை நின்று விட்டது. உடனே வெளியே கிளம்பலாம் என்று கிளம்பியவுடன் மீண்டும் மழை பிடித்துக் கொண்டுவிட்டது. இப்படியே வினோதமாக மாறி மாறி சுமார் ஆறு முறை நடந்தது. ஆகவே நாம் இன்னும் சிறிது நேரம் தியானத்தில் ஈடுபட வேண்டும் என்பது ஸ்வாமிகளின் ஸங்கல்பம் போல் இருக்கின்றது என்று தியானத்தில் அமர்ந்து வெகு நேரம் தியானம் செய்து விட்டு வந்தேன்.

பிறகு முடிந்த பொழுதெல்லாம் சென்று தியானம் செய்து விட்டு வருவேன். அந்த அதிஷ்டானத்திற்கு நமது கையில் பணம் இருந்தால் ஏதாவது கைங்கர்யம் செய்யலாமே என்று நினைப்பேன். கைங்கர்யம் என்றால் பணத்தினால் தான் செய்ய வேண்டுமா என்ன? என்று தோன்றியது. சரீரத்தினாலும்

செய்யலாமே என்று தோன்றவே அங்கு அதிஷ்டானத்தில் வளர்ந்திருக்கும் புல் செடிகளையெல்லாம் பிடுங்கிவிட்டு, நன்றாகப் பெருக்கி, துளஸியைச் சுற்றி வளர்ந்திருக்கும் புல்லையும் எடுத்து விட்டு தண்ணீர் விட்டு விட்டு வருவேன். **நான் ஆத்ம போதேந்திர ஸ்வாமிகளை என்னுடைய குருவாகவே கொண்டுள்ளேன்.** தரிசனத்திற்கு போகும் பொழுது எல்லாம் புஷ்பம், காஷாய வஸ்திரம், தேங்காய், பழம் எல்லாம் வாங்கிச் செல்வேன். பிறகு ஒவ்வொரு வருடமும் சிறிய அளவில் தை மாதம் ஒரு ஸமாராதனை செய்து வந்தேன். விழுப்புரம் பெரிய பெரியவாளின் ஜன்ம ஸ்தானத்தில் அமைந்துள்ள வேத பாடசாலையின் குழந்தைகளும், உபாத்யாயரும் வருவார்கள். ருத்ரம், சமகம், உபநிஷத் எல்லாம் பாராயணம் நடக்கும். விசேஷ அபிஷேக அலங்காரங்கள் செய்து சுமார் 100 பேருக்கு ஸமாராதனையும் நடக்கும். இப்படி பிரதி வருடமும் நடத்தி வந்தேன்.

ஒரு பெரிய பிரமுகர் பெரிய பெரியவாளிடம் இந்த அதிஷ்டானம், கிராமத்தில் உள் அடங்கி உள்ளது. ஆகவே, Main Highwayல் ஒரு Arch கட்டினால் தர்சனார்த்திகள் வந்து தரிசனம் செய்ய வசதியாக இருக்கும், பெரியவாள் உத்தரவு செய்தால் நான் கட்டித் தருகின்றேன் என்றார். அதற்கு ஸ்ரீ பெரியவாள் ஆர்ச் எல்லாம் ஒன்றும் தேவையில்லை. **யாருக்கு பாக்யம் இருக்கின்றதோ அவர்கள் தானாக வருவார்கள் என்று கூறிவிட்டார்.**

ஒரு சமயம் நான் ஆராதனையின் ஏற்பாடுகளை செய்வதற்காக ஸ்ரீதருடன் ஆராதனைக்கு ஒரு மாதம் முன்பாக சென்று இருந்தேன்; அப்பொழுது ஸ்ரீதரிடம், என் கையில் பணம் இருந்தால் பெரிய அளவில் அதிஷ்டானத்தைக் கட்டாவிட்டாலும் ஓரளவாவது சீர் செய்வேன் என்று கூறினேன். அதற்கு, ஸ்ரீதர் 'என்னவெல்லாம் செய்வீர்கள்?' என்று கேட்டான். முதலில், கீழே நன்றாக தரை போடுவேன், மேலே

ஓடு மாற்றி விட்டு வாரைகளுக்கு பெயின்ட் அடிப்பேன். வெளியில் வெள்ளை அடித்து விட்டு காவி பட்டையும் அடிப்பேன் என்றும் மேலும் சிறிது சிறிது மாற்றங்களையும் கூறினேன்.

சுமார் ஒரு 15 நாள் கழித்து மீண்டும் நானும் ஸ்ரீதரும் ஏற்பாடு விஷயமாக அங்கு செல்லுகையில் ஸ்ரீதர் அதிஷ்டானத்தைப் பார்த்து அப்படியே அசந்து விட்டான். ஏன் என்றால் நான் 15 நாட்களுக்கு முன்பாக என்னவெல்லாம் செப்பனிட வேண்டும் என்று கூறியிருந்தேனோ அதில் ஒரு சிறிது மாற்றம் கூட இல்லாமல் ஒரு பிரமுகர் செப்பனிட்டிருந்தார். எனக்கு அழுகையே வந்து விட்டது. சுவாமிகள் கருணாமூர்த்தி. இன்றும் நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம நான் சென்று வரும் இடங்களில் இதுவும் ஒன்று.

இந்த ஊரில் அதிஷ்டானத்தில் பூஜை செய்து வரும் அர்ச்சகரின் பேரக் குழந்தையின் பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டு என்னுடைய வேத பாடசாலையில் சேர்த்துக் கொண்டுள்ளேன். பிற்காலத்தில் அதிஷ்டானத்தை நன்றாக செப்பனிட்டு இந்த பையனைக் கொண்டு வைதீகமான முறையில் நித்ய பூஜையும், நாம கீர்த்தனமும், பாராயணங்களும், நடத்தத் திட்டமிட்டுள்ளேன். என்னுடைய இந்த மனோரதத்தையும் ஸ்ரீ குருநாதர்தான் பூர்த்தி செய்து வைக்க வேண்டும். சென்ற வருடம் சிவராத்ரி அன்று இரவு முழுவதும், அதிஷ்டானத்தில் பிரதிஷ்டை செய்துள்ள சிவலிங்கத்திற்கு ஐந்து கால பூஜை செய்தேன். இப்படியாக என்னுடைய ஈடுபாடு மஹாத்மாக்களின் அதிஷ்டானத்தில் தான் அதிகமாக இருந்தது.

*(தொடரும்)*

# யுக தர்ம ஸ்தாபகர்கள் - 6

## ஸ்ரீ பகவந் நாம போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

- தொடர்ச்சி

ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளாக அபிஷேகம் செய்யப் பட்ட ஸ்ரீ பகவந்நாம போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் நாம ஸித்தாந்தத்தை செய்ய மீண்டும் ஓர் முறை கயிலையிலிருந்து இறங்கி வந்துள்ள ஸ்ரீ சங்கர பகவத் பாதராகவே பொலிந்தார்.

குரு ஸ்வாமிகள் ஸ்ரீ மடத்தின் பொறுப்புகளை போதேந்திராளிடம் ஒப்புவித்து, ராமேச்வர யாத்திரையாக கிளம்பினார். ஸ்ரீ போதேந்திராளும் குரு விரஹம் தாளாதவராக மடத்தின் பூஜை பரிவாரங்களுடன் தொடர்ந்தார். காஞ்சி யிலிருந்து புறப்பட்டு திருவண்ணாமலை, திருக்கோவிலூர் போன்ற க்ஷேத்ரங்களைத் தரிசித்துக் கொண்டே திருப்பாப் புலியூரின் அருகே கருட நதீ தீரத்தில் வந்து தங்கியிருக்கையில் ஸ்ரீ ஆத்ம போதேந்திரர் யாத்ரையின் ச்ரமம், வார்த்திக்யம் இவற்றால் மிகவும் களைத்திருந்தார். போதேந்திராளிடம் இந்த யாத்ரையில் தனது தேஹ யாத்ரை முடியப்போவதை சூசிபித்தார். குருநாதரின் பிரிவை எண்ணவும் துணிவற்ற போதேந்திராள் குரு ஸேவை செய்து கொண்டு அவரைக் கவனித்து வந்தார். **ஒரு நாள் நாம ஸ்மரணத்துடனும், சந்திர மௌளீசனின் த்யானத்துடனும் குரு ஸ்வாமிகள் மஹா ஸமாதியடைந்தார்.** ஸ்ரீ போதேந்திராள், குருவிற்கு பிருந்தாவனம் அமைத்து ஆராதனங்களைச் செய்து மிகுந்த தாபத்துடன் காஞ்சீபுரத்திற்கே திரும்பிவிட்டார்.

காஞ்சி மாநகரில் எழுந்தருளிய ஸ்வாமிகள் பகவன்னாம பிரசாரமும், அத்வைத ப்ரசாரமும் செய்து கொண்டு பிரதி தினம் லக்ஷத்தொண்ணாயிரம் நாம ஜபம் செய்து கொண்டும் பிறரை

செய்யும்படி உத்ஸாஹப்படுத்திக் கொண்டும் சோபித்து வந்தார். ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீமத் பாகவதத்தை மிக அழகாக உபந்யாஸிப்பாராம். அவரது சிஷ்யர்கள் அதை கீர்த்தனைகளில் அனுபவிக்கிறார்கள், 'ஸ்ரீ குரு போதேந்திரம் - மானஸ பஜ பஜ யோகீந்த்ரம்' எனும் கீர்த்தனையின் சரணத்தில் 'பாகவதாம்ருத ஹர்ஷித ஸுஜனம்' என்று பாடுகிறார்கள். ப்ரவசனத்தை ச்ரவணம் செய்த பாக்யவான்கள் ஸ்வானுபூதியில் மூழ்கி திளைப்பர். ப்ராம்மணன், க்ஷத்ரியன் முதலிய வர்ணத்தவர்கள் அனைவருக்கும் ப்ரும்மச்சாரி, க்ருஹஸ்தன், வானப்ரஸ்தன், ஸன்யாஸி முதலிய எல்லா ஆச்ரமத்தினருக்கும் முக்கியமான தர்மம் நாம ஸங்கீர்த்தனம் என்பதை உபதேசங்களில் வலியுறுத்தி அனைவரையும் பின்பற்றச் செய்தார்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் சிஷ்யர்கள் அவரது குணங்களையும் ரூப லாவண்யத்தையும் அனுபவித்ததை, கீர்த்தனைகளின் மூலமே தெரிவிக்கிறார்கள். 'மன்மத கோடி மனோஹரரூபம்', 'பஜனா பராமயாஹ்லாதன சந்த்ரம்', 'ஸ்ரீ சுக நாரத ஸனக ஸமானம்', 'ராக த்வேஷ ரஹிதாந்த: கரணம்', 'காமாதி ஷட்ரிபு கண்டன தீரம்', 'போதேந்த்ரம் ஜகதாம்குரும்', 'நாம மஹாநிதி தான உதாரம்' 'ஊர்த்வ புண்ட்ராங்கித பாலம்', 'ஸௌர பவர துளஸீ மண ஹாரம்' என்றெல்லாம் அனுபவிக்கிறார்கள். இதற்கு அர்த்தம் எழுதும் அவசியமே இல்லை. நாம ஸூத்ரம் வைத்துக் கொண்டு ஸதா ஜபம் செய்வார். எந்த நேரத்திலும் நாமோபதேசம் ஜாதி, மத பேதமின்றி யாவருக்கும் வழங்குவார். இப்படி எண்ணிலடங்காத குண பூர்ணரான ஸ்வாமிகள் தன் குருவின் மஹா ஸமாதிக்குப் பிறகு சில வருடங்கள் காஞ்சியிலேயே தங்கியிருந்தவர் குருவின் ஸேது யாத்ரையை பூர்த்தியாக்க விரும்பி, அதிக பரிவாரங்கள் இன்றி ராமேச்வர யாத்திரை கிளம்பினார்.

ஸ்ரீ ஸ்வாமிகள் ராமேச்வரத்தில் சில மாதங்கள் தங்கி இருந்துவிட்டு அநேக க்ஷேத்திரங்களை தரிசித்துக் கொண்டு

ஸ்ரீரங்கம், திருவானைக்காவல் முதலிய ஸ்தலங்களையும் தரிசித்துக் கொண்டே கும்பகோணம், மத்யார்ஜுனம் எனும் திருவிடைமருதூர் என்ற க்ஷேத்ரங்களை தரிசிக்கையில் திருவிடைமருதூர் வாஸிகள் அதி தேஜஸ்வியான நாம கீர்த்தனம் செய்கின்ற இந்த யதீச்வரரை தரிசிக்க பூர்ண கும்பத்துடன் வந்து வரவேற்று, நமஸ்கரித்து, ஆனந்த பரவசர்களாகி பகவன்னாமங்களை உரத்த குரலில் கீர்த்தனம் செய்தனர். ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு மிகவும் மகிழ்ச்சியும் ஆனந்தமும் ஏற்பட்டது. தமிழ் நாட்டில் அநேக இடங்களில் யாத்திரை செய்தும் எங்கும் காணக்கிடைக்காத நாம ருசி இந்த ஊர் மக்களுக்கு எங்ஙனம் ஏற்பட்டுள்ளது! லஜ்ஜையை விட்டு எப்படி இவ்வளவு உத்ஸாஹத்துடன் கீர்த்தனம் செய்கிறார்கள்! என்ற வியப்பை அடக்க இயலாமல் அவர்களிடமே வினவினார் ஸ்வாமிகள்.

கிராம ஜனங்களும் மிகவும் மகிழ்ச்சியுடன், ஸ்வாமின்! எங்களுக்கும் ஓர் மஹாத்மாவின் ஸங்கம் கிடைத்துள்ளது. **திருவிசலூரில் இருக்கிறார், ஸ்ரீதர ஐயாவாள்** என்ற திருநாமம். தினமும் மஹாலிங்க ஸ்வாமி தரிசனத்திற்காக எங்கள் ஊருக்கு வருவார்கள். அவரது தரிசனம், அவரது வாக்கிலிருந்து இடையறாது பெருகும் சிவ நாமம் இவற்றால் எங்களுக்கும் நாம ஸங்கீர்த்தனத்தில் ருசி ஏற்பட்டுள்ளது. உடனே ஸ்வாமிகள், இன்றைக்கு வருவாரோ? என்று ஆர்வம் பொங்கக் கேட்க, ஜனங்கள், 'தினந்தோறும் பிரதோஷ தரிசனத்திற்கு வருவார். அர்த்த ஜாம ஸேவை வரை இருந்து செல்வார்' என்றனர். நாமும் அவரைப் பற்றி நிறைய கேள்விப்பட்டுள்ளோம். ஸந்திக்கும் எண்ணத்தில் தான் இந்த தக்ஷிண தேச யாத்திரையே என்று கூறி மிகுந்த ஆர்வத்துடன் மத்யார்ஜுனேச்வரர் ஆலயத்தில் அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு சிவ தரிசனம் செய்து ப்ராகாரத்தில் ராம நாம ஜபம் செய்து கொண்டு அமர்ந்திருந்தார்.

ஸ்ரீ ஸ்ரீதர ஐயாவாளும் சிவ நாம கீர்த்தனம் செய்து கொண்டே கண்களில் நீர் மல்க சிவ தரிசனம் செய்து ஸ்ரீ

ஸ்வாமிகள் வந்திருப்பதைக் கேள்விப்பட்டு தரிசனத்தால் ஆவலுடன் வெளிப் ப்ரகாரத்தில் வலம் வருகையில் தேஜோமயமான யதீச்வரரைப் பார்த்து மிகுந்த வினயம், பக்தி, ச்ரத்தையுடன் சிவ நாமாக்களைக் கூறிக் கொண்டு ஸ்வாமிகளை வந்தனம் செய்தார். **சிவபெருமானையே காண்பது போன்ற அனுபவமடைந்து ஸ்வாமிகள் ஆச்ரம தர்மங்களையும் மறந்து எழுந்து ஆலிங்கனம் செய்து கொண்டு** தனது தென் தமிழ் நாட்டின் யாத்திரையும் தீர்த்த யாத்திரையும் இப்போது தான் உண்மைப் பயனையடைந்ததாகக் கூறினார். ஸ்ரீதர ஐயாவாளோ, 'தங்களை ஸாக்ஷாத் மஹாலிங்க ஸ்வாமியாகவே காண்கிறேன். அவதார புருஷரான தாங்கள் என்னைப் போன்ற ஸாமான்யனை இப்படிக் கொண்டாடி கௌரவப்படுத்துவதற்கு என்ன காரணமென்று தெரியவில்லையே! உண்மையில் **'இவ்வளவு நாட்கள் ப்ரதோஷ தரிசனம் செய்ததன் பயனாக இன்று ஸ்வயம் பரமேச்வரனை காணும் பாக்யத்தால் நான் அன்றோ தன்யனாக என்னைக் கருதுகிறேன்!'** என்றார்.

ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகளோ, அவரின் நிஜ ஸ்வரூபத்தை உணர்ந்தவராதலால், 'தாங்கள் ஏன் என்னிடம் கபடம் செய்ய வேண்டும்? தங்களது நிஜ ஸ்வரூப வைபவத்தைக் காட்டலாகாதா! என, ஸ்ரீ ஐயாவாளோ, மஹாத்மாவான தாங்கள் என்னை இப்படிப் புகழ்வதன் காரணம் புரியலையே! எனக்குக் கர்வம் வந்து விடாமல் இருக்க அருள வேண்டும், நாம ருசி உண்டாக அனுக்ரஹம் செய்ய வேண்டும் என்றும் கூறிவிட்டு மீண்டும் வந்தனம் செய்தார். சற்று நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு மறு நாள் ஸந்திப்பதாகக் கூறி ஐயாவாள் விடைபெற்றார்.

**யோகீச்வரரும் நித்திரையை ஜயித்தவருமான ஸ்ரீ போதேந்திராள்** இரவு முழுவதும் நாம நிஷ்டையில் ஆழ்ந்தார். அவர் மனதில் அவ்வப்போது **ஸ்ரீதர ஐயாவாள் சிவனின் அவதாரம் என்று நன்றாக அறிகிறேன்**. நான் கூறியதை அவர்

ஏற்கவில்லையே, என்னிடம் ஏன் அவர் தன்னை மறைக்கிறார்' என்று சிந்தித்திருக்கையில் அதிகாலையில் **நிஷ்டையில் மஹாலிங்க ஸ்வாமி தரிசனமும் உடனே அந்த லிங்கம் ஸ்படிக நிறத்துடன் விபூதி ருத்ராக்ஷமணிந்து தேஜஸ்வியான ஸ்ரீ ஐயாவாளாக காட்சியளிக்க, மீண்டும் மீண்டும் மஹாலிங்க ரூபமாகவும், ஸ்ரீ ஐயாவாள் ரூபமாகவும் காட்சி கண்டு** ஆனந்தப்பட்டார். நிஷ்டை கலைந்து அனுஷ்டானங்களை முடித்து திருவிசலூர் கிளம்பினார்.

ஸ்ரீதர ஐயாவாளும் ஸ்நான, ஜபாதிகளுக்குப் பிறகு திண்ணையிலமர்ந்து ஸ்ரீ பாகவதப் படனம் செய்து கொண்டே ஸ்ரீ போதேந்திராளை தரிசித்து நாமோபதேசம் பெற வேண்டும் என்று எண்ணியவாறு இருக்கையில் ஸ்வாமிகள் வருவதை அங்குள்ளோர் மூலம் அறிந்து, பாராயணத்தை நிறுத்தி விட்டு ஓடோடிச் சென்று ஸ்ரீ ஸ்வாமிகளை வரவேற்று கரம் கூப்பி, கண்ணீர் மல்க அவர் தன்னைத் தேடி வந்த கருணையை எண்ணி உருகியவாறே வீழ்ந்து வணங்கினார். **ஸ்ரீ ஸ்வாமிகளோ ஆச்ரம தர்மத்தை மீற முடியாதாகையால் நமஸ்கரிப்பதாக கீழ் வரும் ப்ரஸித்த ச்லோகத்தால் தெரிவித்தார்:**

*ஈசே தஸ்ய ச நாமனி ப்ரவிமலம் ஞானம் தயோரூர்ஜிதம்*
*ப்ரேம ப்ரேம ச தத்பரேஷு விரதிச்ச அன்யத்ர ஸர்வத்ர ச ।*
*ஈசேக்ஷா கருணா ச யஸ்ய நியதா வ்ருத்தி: ச்ரீதஸ்யாபியம்*
*தம் வந்தே நரரூபம் அந்தகரிபும் ஸ்ரீ வேங்கடேசம் குரும் ॥*

இந்த ச்லோகத்தை கூறுவதன் மூலமாக ஸேவிப்பதாகத் தெரிவித்து ஸ்ரீ போதேந்திராள் ஸ்ரீ ஐயாவாளிடம் தான் கொண்டிருந்த பெரு மதிப்பைத் தெரிவித்தார்.

*(தொடரும்)*

**- பரனூர் ஸ்ரீகாந்த ஸர்மா**

# ஸாதனையின் அவசியம்

**- ஸ்ரீ குருஜி**

**ந**ம் எல்லோருக்குமே தியானம் செய்ய மிகவும் ஆசையாக உள்ளது. என்ன காரணம், இன்று வேதாந்தம், தியானம், குண்டலீ, ராஜ யோகம் என்று பல விதமான புத்தகங்கள் மலிந்து விட்டன. ஆன்மீகப் பத்திரிகைகள் என்ற பெயரில் வரும் பத்திரிகைகளிலும் இது மாதிரி நிறைய விஷயங்கள் அநேகமாகக் காணக் கிடைக்கின்றன. இவைகளில் அநேகமாக சுமார் 99 சத விகிதம் பேத்தல்கள்தான் உள்ளன.

எந்த விஷயமானாலும் வெறும் கிரந்தங்களிலும் பிரசங்கங்களிலும் மட்டும் இருப்பதால் நமக்கு அதில் நம்பிக்கை வராது. ஜகத் மித்யை, பிரம்மம், சத்யம் என்றும், ஜீவன் முக்தி என்றும், ஆத்மானந்தம் என்றும் எவ்வளவுதான் படித்தாலும் கேட்டாலும் நம்பிக்கை வராது. **ஆனால் ஸ்ரீ பெரியவாளை போலும், ரமண மஹரிஷிகள் போன்ற மஹாத்மாக்களை பார்த்தால்தான் நமக்கு இதுவும் அடையக்கூடிய ஒன்று தான், சத்யமானது தான் என்று நம்பிக்கை உண்டாகும்.** அது போல மீரா, ஆண்டாள் போன்றவர்கள் எல்லாம் பகவானுக்காக கதறி அழுதார்கள் அவர்களுடைய உடம்பில் பாவத்தினால் பல விதமான பிரேம லக்ஷணங்கள் வெளிப்பட்டன என்பதை எல்லாம், நமக்கு படித்தால் நம்பிக்கை வராது. ராமக்ருஷ்ண **பரமஹம்ஸர்** போன்று சமீப காலத்தில் வாழ்ந்த மஹாத்மாக்களின் வாழ்க்கையில், இது போன்ற **பிரேம லக்ஷணங்கள் வெளிப்பட்டன** என்பது தான் இது போன்ற கிரந்தங்களுக்கே பிரமாணம்.

ஆகவே நாம் இவற்றையெல்லாம் படித்து விட்டு தியானம் செய்ய முயற்சிக்கின்றோம். முதலில் தீவிரமான வேகத்தில்

ஆரம்பித்து போகப் போக குறைந்து விடுவதைக் காணலாம். கண்ட புத்தகங்களைப் படித்தும், பிரசங்கங்களைக் கேட்டும், அதில் சொன்னபடியெல்லாம் முயற்சித்துப் பார்ப்பார்கள் சிலர்.

இவர்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். **முதலாமானவர்கள் எல்லாவற்றையும் மிகைப்படுத்திப் பார்ப்பவர்கள்.** நான் கோயிலுக்குப் போனேன், போனவுடன் மணி அடித்தது, புஷ்பம் கீழே விழுந்தது, அர்ச்சகர் என்னைப் பார்த்து மிகவும் தெரிந்தவர் போல விசாரித்தார் என்பார்கள். எனக்கு தியானத்தில் பல விதமான காட்சிகள் ஏற்படுகின்றன என்பார்கள். உலகமே வெறுத்துவிட்டது என்பார்கள். அடிக்கடி ஸமாதி அவஸ்தைக்கும் போவதுண்டு என்பார்கள். ஆனந்தத்தைத் தாங்க முடியவில்லை என்பார்கள். ஏதாவது வியாதியைப் பற்றி படிக்கும் பொழுதோ, கேட்கும் பொழுதோ, அது மாதிரி வியாதி உள்ளவர்களுக்கு இது இது மாதிரியான அறிகுறிகள் காணப்படும் என்று கேட்டாலோ, படித்தாலோ, தங்களுக்கும் அப்படியெல்லாம் இருப்பது போல் தோன்றும் அநேகருக்கு. இவர்களுக்கும் ஏதாவது ஒரு மஹாத்மாவின் சரித்திரத்தையும், அனுபவங்களையும் படிக்க ஆரம்பித்தவுடன் தங்களுக்கும் அது போலவே இருப்பதாகக் கற்பனை செய்து கொள்வார்கள். பிராணாயாமம்தான் ஒரே வழி என்று ஒருவர் சொன்னால் அன்று முதல் பிராணாயாமம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். பிறகு ஒரு புத்தகத்தில் பிரணவ ஜபத்தினாலேயே சர்வமும் சித்திக்கும் என்றாலோ அதையும் ஆரம்பித்து விடுவார்கள். எங்காவது பிரசங்கத்தில் நீயே தான் அந்தக் கடவுள் என்று கேட்டால், நானே பகவான் என்றும் ஆரம்பித்து விடுவார்கள். அப்படி ஆரம்பித்ததையும் தொடர்ந்தார் போல் செய்யமாட்டார்கள். அங்கு ஒருவர் இருக்கிறார், இங்கு ஒரு மஹாத்மா இருக்கிறார் என்று யார் சொன்னாலும், அல்லது படித்தாலும் போதும், குழந்தைகள் எல்லாம் பல தேசத்து ஸ்டாம்புகளை சேர்த்து ஒட்டி வைத்துக் கொள்வது போல எல்லா இடத்துக்கும் அலைந்து கொண்டிருப்பார்கள். முடிவாக இவர்கள் கண்ட பலன் எதுவும் இருக்காது.

இரண்டாமவர்கள் யார் என்றால் இவர்களுக்கும் தெய்வீக விஷயமான நாட்டம் இருக்கும், ஆனால் எதையும் லேசில் ஒத்துக் கொள்ள மாட்டார்கள், எல்லாவற்றிலும் சந்தேகம். இப்படி இவர்களது பிடிவாதமும் சந்தேகமும் என்ன செய்யும் என்றால் உண்மையான விஷயங்களையும் சேர்த்து புறக்கணித்து விடும். எந்த மஹாத்மாவையும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். எல்லோரையும் பரிகசிப்பார்கள், தனக்குத் தானேதான் குரு என்பார்கள். ராமாயணம், பாகவதம் போன்றவைகள் தத்துவங்களைச் சொல்வதற்காக எழுதப்பட்ட வெறும் கதைகள் என்பார்கள். அத்வைதம்தான் சத்யம், பகவானுக்கு ரூபம், நாமம் ஒன்றும் கிடையாது, தியானம் தான் நேர் வழி, ஆசாரம், அனுஷ்டானம், க்ரியைகள் எதுவும் தேவையில்லை என்பார்கள். நானே உண்மையைக் கண்டு பிடித்து விடுவேன் என்பார்கள். தனக்குத் தெரியாததே இல்லை என்பார்கள். தியானத்தையும் ஏதாவது ஏடாகூடமாக செய்ய முயற்சித்து எப்பொழுதோ ஒரு முறை செய்து வருவார்கள்.

இந்த இரண்டு விதமானவர்களும் கரையேறுவது கஷ்டம். முதலில் தெய்வீகமான வாழ்க்கை என்றால் என்ன? அதை அடைவதற்கு எது மார்க்கம்? எவையெல்லாம் அனுகூலம்? எவையெல்லாம் பிரதிகூலம்? என்று தெரிந்த கொள்ள வேண்டும். நாம் ஒரு குருவை அடையாமல் சாதனையில் ஒருக் காலும் முன்னேற்றம் அடைய முடியாது. ஆகவே தெய்வீகமான வாழ்க்கையில் முன்னேற்றமடைய விரும்புபவர்கள் அங்கு ஒருவர், இங்கு ஒருவர் என்று பல இடங்களுக்கும் போய் வருவதாலும் ஒரு பிரயோஜனமும் இல்லை. ஒரு குருவை அடைவதற்கு முன்பு பல முறை யோசித்து நன்றாகத் தீர்மானம் செய்து அடைய வேண்டும். அடைந்த பிறகு அதிலேயே தீவிரமாகவும் ஸ்திரமாகவும் இருக்க வேண்டும். **யார் முன்பு நமக்கு பரம சாந்தி ஏற்படுகின்றதோ, யாரைக் கண்டால் நமக்கு ஆகர்ஷணம் ஏற்படுகின்றதோ, யாரிடம் நமக்கு ஒரு கௌரவ புத்தியும் பூஜ்ய பாவமும் ஏற்படுகின்றதோ அவரையே நாம் குருவாகக் கொள்ளலாம். ஸம காலத்தில் வாழும் மஹாத்மாக்களின் வசனத்தையும் முக்கியமான பிரமாணமாகக் கொள்ள வேண்டும்.**

இப்படி குருநாதரை அடைந்த பிறகு அவர் காட்டிய மார்க்கத்தில் தீவிரமாக செல்ல வேண்டும். வேறு எந்த மார்க்கத்திலும் சலன புத்தி ஏற்படக்கூடாது. அடைந்த பிறகும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருப்பதால் ஒரு பிரயோஜனமும் இல்லை.

**தியானம் செய்ய ஆரம்பித்து சில நிமிடங்களில் எல்லாம் ஸமாதி சித்தித்து விடாது. பல வருட காலம் ஆகும். விடாத பயிற்சி தேவை.**

தான் தெய்வீக வாழ்க்கையில் முன்னேறிக் கொண்டிருப் பதாகத் தானே நினைத்துக் கொண்டும், பிறரை நினைக்க வைக்கவும், சிலர் அழுக்கான வஸ்திரங்களைத் தரிப்பது, சாப்பிடாமல் இருப்பது, அல்லது கண்டதை சாப்பிடுவது, ஸ்நானம் செய்யாமல் இருப்பது, அல்லது பிரமை பிடித்தால் போல் ஏதாவது பிதற்றிக் கொண்டு அலைவது, எல்லோரிடமும் விரக்தி வந்தால் போல் சிடு சிடு என்று பேசுவது, அல்லது அன்பாகப் பழகுவதாக நடிப்பது என்பது எல்லாம் வீண்.

நாம் அளவுடன் தூங்கி, அளவுடன் ஸாத்வீகமான ஆகாரங்களைப் புசித்து, சுத்தமாக நம்முடைய இருப்பிடத்தையும், நம்மையும் வைத்துக் கொண்டு, நித்ய கர்மங்களையும், நம்முடைய கடமைகளையும் அழகாக அளவுடன் செய்து கொண்டு, யாரிடமும் ரொம்பவும் ஸ்நேகமோ, அப்ரியமோ இல்லாமல் அளவுடன் பழகி, **ஆன்மீக பயிற்சிக்காகத் தனியான ஒரு காலம், அளவு என்று தீர்மானித்துக் கொண்டு** அந்த அளவும், காலமும் குறையாமலும், மாறாமலும் செய்து, குரு நாதரிடமும், நாம் செய்யும் சாதனைகளிலும் அசைக்க முடியாத நம்பிக்கையும் வைத்து செய்தால் நாம் நிச்சயமாக ஆன்மீக முன்னேற்றம் அடைவோம். **நம்முடைய ஸாதனைகளையும் ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும்.**

# தியானம்

**- ஸ்ரீ குருஜி**

அதிகாலையில் எழுந்து கொள்ள வேண்டும். அதிகாலை நேரத்தில் மனம் இயற்கையாகவே சுலபத்தில் அடங்கும். காலை எழுந்தவுடன் ஸ்நானம் செய்து, சுத்தமான இடத்தில் அமர்ந்து தியானம் செய்து வர பழக வேண்டும். வடக்கு முகமாகப் பார்த்து அமர்ந்து செய்வது நல்ல பலனைத் தரும். தர்ப்பாசனம், மான் தோல், கம்பளி போன்றவற்றை ஆசனங்களாக உபயோகப் படுத்தலாம். நாம் எந்த ரூபத்தைத் தியானம் செய்ய ஆசைப்படுகின்றோமோ அந்த மூர்த்தியின் படத்தை நமக்கு முன் வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு விளக்கு (மின் விளக்கு அல்ல) ஏற்றி வைத்துக் கொள்வது நல்லது. அது போல் புஷ்பங்களையும் சமர்ப்பிக்கலாம். ஊதுபத்தி போன்றவற்றால் வரும் வாசனையினால் மனம் தடுமாறும். ஆகவே அவைகள் தேவையில்லை. **நாம் தியானம் செய்வதற்காக வைத்துள்ள படத்தை மாற்றக்கூடாது.** அதையே வைத்துக் கொள்ள வேண்டும். அந்த அறையையும் தூய்மையானதாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இரவு வெகு நேரம் கழித்து படுக்கச் செல்வோமானால் காலையில் சீக்கிரம் எழுந்தவுடன் உடல் அசதியாக இருக்குமாதலால் மனது ஒருமுகப் படாது. ஆகவே இரவு சீக்கிரமே படுக்கச் சென்று விடவேண்டும். தியானத்திற்கு முன்பாக நாம் தியானம் செய்யும் மூர்த்தியை மானஸீகமாக ஒரு ஆஸனத்தில் அமர்த்தி பாதத்தில் தீர்த்தம் விட்டு அலம்பி, புஷ்பங்கள் சமர்ப்பித்து, பிரதக்ஷணம் செய்து, சரணங்களை எடுத்து சிரஸில் சூட்டிக் கொண்டு (எல்லாம் பாவனையே), எனக்கு மனது இன்று நன்றாக ஒருமுகப் பட வேண்டும், நான் தியானத்தில் மேலும் ஆழந்து செல்ல துணை புரிய வேண்டும் என்று பிரார்த்திக்க வேண்டும். பிறகு கண்களை, தாம் தியானம்

செய்ய வைத்திருக்கும் ரூபத்தை முறைத்துப் பார்க்காமல், லலிதமாக அன்புடன் கண்களைத் திறந்து பார்த்து பழகிக் கொண்டே சில காலம் வர வேண்டும். முழு ரூபத்தையோ, அல்லது சரணங்களை மட்டுமோ கூட தனியாக கவனம் செலுத்தித் தியானிக்கலாம், அது அவர் அவர்களின் ருசியைப் பொருத்தது.

ஒரு சமயம் ஆரம்ப காலங்களில் மனது தியானத்தில் ஈடுபடாமல் இருந்தாலும் குறிப்பிட்ட காலம் வரை பேசாமல், ஆடாமல், அசையாமல் ஒரே நிலையில் குறிப்பிட்ட காலம் அமர்ந்து பழகுவதினாலும் மனம் குறுகிய காலத்தில் ஒருமுகப்படும். சாதாரண பிராணாயாமமும் அந்தக் காலத்தில் அப்யசித்து வருவதினாலும் மனம் ஒருமுகப்படும். இப்படியே சிறிது காலம் பழகிய பிறகு கண்களை மூடி எப்படி, ஒரு சித்திரத்தைப் பார்த்து அது போலவே மற்றொன்று வரைய ஆசைப்படுபவன், முதல் சித்திரத்தைப் பார்த்துப் பார்த்து வரைவானோ, அது போல தியானம் செய்யப்படும் படத்தில் உள்ள ரூபத்தை பார்த்துப் பார்த்து ஹ்ருதயத்தில் மானசீகமாகக் கொண்டு வந்து விடவேண்டும். இதற்குப் பல காலம் பிடிக்கலாம். அவசரப்படக் கூடாது. அப்படி சரியாக வரவில்லை என்றால் மீண்டும் சிறிது காலம் நேரிடையாகக் கண்களைத் திறந்து கொண்டே பழக வேண்டும்.

தியானம் முடிந்தவுடன் உடனே வேகமாக லௌகீக விஷயங்களில் ஈடுபடாமல், சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டுப் பிறகு ஈடுபட வேண்டும். அன்று நாம் செய்யும் காரியங்கள் எல்லாவற்றையும் நிதானமாகவும், பதட்டம் இல்லாமலும் செய்ய வேண்டும். எந்தக் காரியம் செய்து கொண்டிருந்தாலும் மனதில் இறைவனுடைய நாமத்தை ஜபம் செய்து கொண்டே இருக்க வேண்டும். முதலில் சிரமமாக இருந்தாலும் காலப் போக்கில் பழக்கமாகிவிடும். முடிந்த பொழுது ஒரு நோட்டில் நாம லேகனம் செய்து பழகி வர வேண்டும். **பகவத் தரிசனம் இல்லாத வாழ்க்கை வீண் என்பது எப்பொழுதும் அடி மனதில் இருந்து கொண்டே**

**இருக்க வேண்டும்.** மிகவும் குரலை உயர்த்தியும், அதிகாரமாகவும், பிறருடைய மனது புண்படும்படியும் பேசக்கூடாது. எவ்வளக்கெவ்வளவு மௌனமாக இருந்து குறைத்துப் பேசுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு மனது தியானத்தில் லயிக்கும். எல்லோருடனும் அன்புடன் பழகவேண்டும் என்பதற்காக விவகாரத்தில் மாட்டிக் கொண்டு நம்முடைய மனது சஞ்சலம் அடைய விடக்கூடாது. **பகவத் தரிசனத்திற்காக எதையும் இழக்கலாம், ஆனால் எதற்காகவும் பகவத் தரிசனத்தை இழந்து விடக்கூடாது.**

எப்பொழுதும் பிரசன்னமாக இருக்க வேண்டும். பிறர் குற்றங்களையேப் பார்க்கக் கூடாது. கண்ட இடத்தில் ஆகாரங்களை உட்கொள்ளக் கூடாது. கண்ட நபர்களிடம் ஆகாரங்களை வாங்கி உட்கொள்ளக் கூடாது. யாரையும் அநாவசியமாகத் தொட்டுப் பழகக்கூடாது. நம்மையும் பிறர் தொடுவதற்கு அனுமதிக்கக் கூடாது. தேவையில்லாத பேச்சுக்களையும், படிப்பதையும், தேவையில்லாத இடத்திற்கு போவதையும் தவிர்க்க வேண்டும். நம்முடைய உடல் முழுவதையும் வஸ்திரங்களினால் பிறரிடம் இருந்து மறைத்துக் கொள்ள வேண்டும்.

பிறர் உபயோகித்த வஸ்திரம், செருப்பு, படுக்கை, சாப்பிடும் தட்டு என்று எதையும் உபயோகப் படுத்தக்கூடாது. நம்முடைய உபயோகத்திற்கு என்று பிரத்யேகமாகத் தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். சரீரத்தை எப்பொழுதும் சுத்தமாகவும், பிரஸன்னமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

லௌகீகமான மனிதர்கள் ஒன்று சேரும் விவாஹம், பொதுக்கூட்டம், போன்ற இடங்களில் இருந்து விலகி இருக்க வேண்டும். லௌகீகமான சம்பாஷணைகளில் கலந்து கொள்ளவும் கூடாது. நேரத்தை வீணாக்கவே கூடாது. எவ்வளவோ கண் தெரியாதவர்கள், முடவர்கள் போன்றவர்கள் எல்லாம் ஆச்சர்யமான பல சாதனைகளை செய்து பிரமிக்க வைக்கின்றார்கள் அல்லவா? பகவான் நமக்கு சர்வ

அங்கங்களையும் பூரணமாகக் கொடுத்தும் நாம் சோம்பேறிகளாக **பகவத் தரிசனத்திற்குப் பாடுபடாமல் வாழ்வது இறைவனுக்குச் செய்யும் முழு துரோகம்.** தியானம் சித்திக்கவில்லை என்பதற்காக விட்டு விடக்கூடாது. நன்றாக பக்தி வருவதற்காகத்தான் இதையெல்லாம் செய்வது. ஆகவே தான் **இதற்கு சாதனை என்றும் பெயர்.** நன்றாகப் பக்தி வந்து விட்டால் அப்பொழுது எந்த ஸாதனையும் தேவையில்லையே.

**இறைவனை தரிசனம் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை ஒருக்காலும் நாம் இழக்கக் கூடாது. இது சத்தியம். நம்பிக்கைதான் மிகவும் அவசியம்.**

தத்துவங்களைப் போதிக்கும் புத்தங்களைக் காட்டிலும் பக்தியையும், உருக்கத்தையும், இறைவனை அடையவில்லையே என்ற தாபத்தையும் வளர்க்கும் மஹாத்மாக்களுடைய சரித்திரங்களைப் படிப்பது சிரேஷ்டம். மாலையில் சிறிது நேரம், ஒரு குறிப்பிட்ட அளவு நமது ஸாதனை செய்யும் அறையில் நாம ஸங்கீர்த்தனம் செய்து வர வேண்டும். **மாலையில் மனது தியானத்தில் ஈடுபடுவது சிரமம். ஆகவே நாம கீர்த்தனம் நல்ல பலனைத் தரும். நாம கீர்த்தனமும் தியானத்திற்கு சமமானதே.** மனம் உருகிப் பாட வேண்டும். நாம் அவர் அவர்களின் வசதிக்கேற்ப தீர்மானித்துள்ள கால அளவுகளைக் குறைக்காமல் செய்து கொண்டே வந்து, பிறகு அவகாசத்திற்கேற்ப அதிகரித்துக் கொண்டு **குறைந்தது ஒரு நாளைக்கு 8 மணி நேரம் தியானம் செய்யும் அளவிற்கு முன்னேறி வர வேண்டும்.** மேலும் மேலும் தியானத்தில் முன்னேற்றம் ஏற்படவும், நமக்கு ஏற்படும் தடங்கல்கள் எல்லாம் விலகவும் தியான சமயத்தில் உருக்கமாகப் பிரார்த்தனை செய்து வர நல்ல பலன் தெரியவரும்.

'Even the longest journey has to start with a single step' என்று சொல்வது போல நாமும் **இன்று முதல் தியானம் பழக ஆரம்பித்து, அதோடு மட்டும் இல்லாமல் விடாமல் செய்து, பகவத் சாக்ஷாத்காரத்தை அடையும் வரை ஓயக்கூடாது என்று சங்கல்பித்துக் கொள்வோமாக.** ●

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 5

(பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் அருணாசல அக்ஷர மண மாலை - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸத்திலிருந்து சில பகுதிகள்)

*ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே*
*ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே*
*ஸத்குரு மஹராஜ் கீ ஜய்.*

*ச்ருதி ஸ்ம்ருதி புராணாணாம் ஆலயம் கருணாலயம்*
*நமாமி பகவத்பாத ஸங்கரம் லோக ஸங்கரம்.*
*ப்ராம்ஹானந்தம் பரம ஸுகதம் கேவலம் ஞானமூர்த்திம்*
*த்வத்வாதீதம் ககன ஸத்ருசம் தத்வமஷ்யாதி லக்ஷ்யம்*
*ஏகம் நித்யம் விமலம் அசலம் ஸர்வதீ சாக்ஷி பூதம்*
*பாவாதீதம் த்ரிகுண ரஹிதம் ஸத்குரும் தம் நமாமி*

*ஸுப்ரமண்யம் சிவம் சாந்தம் பக்தி முக்தி ப்ரதாயகம்*
*அருணாசலஸ்த்வம் கோஹம் இதி போதயந்தம் குரும் பஜே*

*க்ருஷ்ணாய வாஸுதேவாய தேவகி நந்தனாயச நந்தகோப குமராய கோவிந்தாய நமோ நம:*

இந்த தேசத்திற்கு பாரத தேசம் என்று பெயர். ஏதோ ஒரு பரதன் என்ற மஹாராஜா இந்த நாட்டை ஆண்டதனால் வந்தது என்று சொல்கிறது ஒரு legend. வழக்கிலே ஸம்பிரதாய மாக அப்படி வந்து கொண்டு இருக்கிறது. ஆனால் பரதன் என்ற சப்தத்திற்கே பிரம்ம நிஷ்டான் என்று ஒரு அர்த்தம். இந்த பாரத தேசம் முழுவதும் இன்றைய பரியந்தம் பிரம்ம நிஷ்டர்கள் வந்துகொண்டு இருப்பதாலேயே இந்த தேசத்திற்கு பாரத தேசம் என்று பெயர். அப்பொழுது சரீரத்திலே ஏதோ ஒரு ரோகம் ஏற்பட்டது என்றால், அதற்காக வைத்தியரிடம் சென்று இந்த சரீர

ரோகத்தை நிவர்த்திப் பண்ணிக் கொள்கிறோம் அல்லவா? நம் எல்லோருக்கும் ஒரு ரோகம் இருக்கிறது. அதற்கு பவ ரோகம் (பிறவிப் பிணி) என்று பெயர். இந்த பவ ரோகத்தை நிவர்த்தி பண்ணிக் கொள்வதற்கும் ஒரு டாக்டர் வேண்டும். அந்த டாக்டர் யார் என்றால் குருநாதர் ஆவார்.

**ஒவ்வொரு மனிதனும் குருவை ஆச்ரயிக்க வேண்டியது அவசியம். அப்பொழுது குரு என்பவர் யார்? குருவை எப்படி தெரிந்து கொள்வது?** குருவைக் கண்டுபிடிப்பதற்கு என்ன அடையாளம் என்றால், அப்படிப்பட்ட குரு எப்படி இருக்க வேண்டுமென்றால், ஜீவன் முக்தராய் இருக்க வேண்டும். தன்னுடைய ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்காரம் பண்ணி பிரம்மானந்தத்தில் திளைக்கக் கூடிய ஒருவரைத் தான் ஒருவர் குருவாக ஆச்ரயிக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் அவரே பூரணத்துவத்தை அடையாதவராக இருக்கும் போது, அப்படிப்பட்டவரை ஆச்ரயித்து ஒருவருக்கு என்ன பயன் இருக்க முடியும்? ஏனென்றால் அவர்களுக்கே சந்தேகம் இருக்கிறதேயன்றி நிச்சயமான உறுதி இல்லை. அவர்களுக்கே வழி தெரியவில்லை. அப்படிப்பட்டவர்கள் உனக்கு ஒரு வழியை காட்ட முடியாது இல்லையா?

ஸ்ரீ சங்கர பகவத்பாதாளைப் பற்றிச் சொல்லும் போது, **'ஜகத்குரு'** என்று சொல்கிறோம். ஸ்ரீ சங்கரருக்கு 'ஜகத்குரு' என்று ஏன் பெயர் வந்தது? இது ஒரு சம்பிரதாயமாக வந்த வார்த்தையா என்றால் அது வெறும் சம்பிரதாயமான வாக்கு அல்ல. அது அப்படியொரு ஸ்துதி அல்ல. ஸ்ரீ சங்கரர் அவதாரம் பண்ணுவதற்கு முன்னாடி இந்த பாரத தேசத்தில் அநேகமாக எழுபத்தியிரண்டு மதங்கள் இருந்ததாக சொல்வதுண்டு. ஸ்ரீ சங்கரர் அவதாரம் பண்ணியதற்குப் பிறகு பார்த்தால் அநேக மதங்களுடைய பெயர் கூடத் தெரியவில்லை. மேற்கூறிய எல்லா மதங்களும் அதற்கு முன் ஜீவித்திருந்தன. அதில் எந்த

மதங்களை ஆச்சாரியார் கண்டனம் செய்தார் என்று தெரியவில்லை. அது மாதிரி எல்லா மதங்களையும் கண்டனம் செய்து தன்னுடைய அத்வைத மதம் மாத்திரம் ஆச்சாரியாள் இருக்கிற காலத்தில் இருந்தது. அதனால் அவருக்கு ஜகத்குரு என்று பெயர். பின் காலத்தில் வந்தது தான் அனைத்து சம்பிரதாயங்களும் அல்லவா? ஆச்சார்யாள் இருந்த காலத்தில் எல்லா மதங்களையும் கண்டித்து, எந்த எந்த மதங்களை திருத்திக் கொடுக்க வேண்டுமோ, அந்த மதங்களை எல்லாம் திருத்திக் கொடுத்து, சர்வ ஜனங்களையும் அத்வைத மதத்திற்குக் கீழ் கொண்டு வந்ததால், அவரை ஜகத்குரு என்று சொல்கிறோம் அல்லவா? அப்பொழுது **ஜீவன் முக்தியை அடைந்து, பிரம்மானந்தத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் ஒருவரைத் தான் நாம் குருவாக அடைய வேண்டும்.**

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம் ஒருவர் போய் இவ்வாறு கூறினார். "ஸ்வாமி! லோகத்தில் ஜனங்கள் எல்லோரும் பக்தி இல்லாமல் இருக்கின்றனர். நான் போய் பக்திப் பிரச்சாரம் செய்யலாமென்று இருக்கிறேன். பகவானைப் பற்றி எல்லோருக்கும் எடுத்துச் சொல்லலாமென்று இருக்கிறேன்" எனக் கூறி அதற்குத் தாங்கள் அனுக்கிரஹம் பண்ணவேண்டும் என்று பிரார்த்தித்தார். பரமஹம்ஸர் அவரைப் பார்த்துக் கேட்டார், "நீ பகவானைப் பார்த்திருக்கிறாயா?" அதற்கு அவர், "நான் பகவானைப் பார்த்ததில்லை" எனக் கூறினார். அதற்கு பரமஹம்ஸர், "நீ பகவானைப் பார்க்காமல் பகவானைப் பற்றி ஸர்வ ஜனங்களுக்கும் எப்படி எடுத்துச் சொல்ல முடியும்? அதனால் முதலில் நீ போய் பகவானைப் பார். அப்படி நீ பார்த்து விட்டால், பிறகு பகவானைப் பற்றி பிறர்க்குச் சொல்லுவது அவசியமா என்று பார்த்துக் கொள்ளலாம்" எனக் கூறினார். அதற்கு என்ன பொருள் என்றால், அப்படி பகவத் பக்தி பண்ணுவோரைப் பார்த்த பொழுதே, ஸர்வ ஜனங்களுக்கும் தானாகவே பக்தி வந்து விடுமே தவிர, பிரச்சாரத்தினால் இது தேவையில்லை.

பெரிய பெரியவாளுடைய உபன்யாசங்களை எடுத்துப் பார்த்தால், சென்னை உபன்யாசத்தில் ஒரு இடத்தில் கூறியுள்ளார், ''நான் எந்த கிராமம், பேட்டை பேட்டையாகப் போகிறேனோ, அங்கெல்லாம் என்னை தரிசனம் செய்வதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் வருகிறார்கள். இந்த ஜனங்களெல்லாம் பெரியவாள் ஏதோ ஆசையாய் பேசுவார் என்று அதைக் கேட்பதற்கு வருகின்றனர். ஆனால் எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், உபன்யாஸம் பண்ணுவதைக் காட்டிலும், போய் தியானம் பண்ணிக் கொண்டு இருக்கலாம் என்று தோன்றுகிறது. ஏனென்றால், நான் என்னுடைய ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்காரம் பண்ணாமல், ஸர்வ ஜனங்களுக்கும் உபதேசம் பண்ணி ஒன்றும் பிரயோசனமில்லை. அப்படி நான் ஸாக்ஷாத்காரம் பண்ணிவிட்டேன் என்றால், அப்பொழுதும் உபன்யாஸம் தேவையில்லை. ஏனென்றால், என்னைப் பார்த்தே எல்லோரும் மாறிவிடுவார்களே தவிர ஒன்றும் பிரவசனம் பண்ண வேண்டிய அவசியமில்லை''. அதனால் அப்படி ஜீவன் முக்தி அடைந்தவரான குருவை நாம் ஆச்ரயிக்க வேண்டியது.

இப்பொழுது இந்த Invitation (அழைப்பிதழ்) போட்டிருக்கிறார்கள் இல்லையா? அந்த அழைப்பிதழில் ஸ்ரீ பகவானைப் (ஸ்ரீ ரமண மஹரிஷிகள்) பற்றி குறிப்பிடும்போது அவரை நான் ''குரு ரத்னம்'' என்று எழுதியிருக்கிறேன். இப்பொழுது ஆச்சார்யாளைப் பற்றிச் சொல்லும்போது ''ஜகத்குரு'' என்று சொன்னேன் அல்லவா? அது மாதிரி ''குரு ரத்னம்'' என்பதும் ஒரு சம்பிரதாயமான வார்த்தை இல்லை. இப்பொழுது குரு என்றால் எப்படி தெரிந்து கொள்வது எனக் கேட்பீர்கள். சரியாக வேதாந்தக் கிரந்தங்களைத் திரும்பத் திரும்ப எடுத்துப் பார்த்தாலும், ஜீவன் முக்தியை அடைந்தவருக்கு எந்த விதமான அடையாளமும் இல்லை என்றெல்லாம் சொல்கின்றனர் - வெளியில் இப்படி இருப்பாரோ, அப்படி இருப்பாரோ, எப்படி நடந்து கொள்வார், எப்படி பேசுவார் என்று ஒன்றும் சொல்ல முடியாது எனச் சொல்கின்றனர்.

அப்பொழுது அப்படிப்பட்ட மஹாத்மாக்களை நாம் எப்படித் தெரிந்து கொள்வது என்றால் அந்த குருவுக்குப் பின்னால் ஒரு பெரிய கூட்டம் இருக்கிறது, அவருக்கு நிறைய சிஷ்யர்கள் இருக்கின்றனர், அதனால் அவர் பெரிய குரு என்று சொல்ல முடியுமா என்றால், கூட்டம் எல்லாவற்றிற்கும் தான் போகிறது. கூட்டத்தை வைத்துக் கொண்டு சொல்ல முடியுமா? கூட்டம் இன்று எதற்குத்தான் இல்லை? அப்பொழுது கூட்டத்தை வைத்துக் கொண்டும் சொல்ல முடியாது இல்லையா?

அவருக்குப் பெரிய ஆச்ரமங்கள் எல்லாம் இருக்கின்றன. ரொம்பப் பெரிய பிரபுவாக இருக்கிறார் என்றால், அதுவும் பெரிய அடையாளம் ஒன்றும் இல்லை. ஏனென்றால் மஹாத்மாக்கள் ஸர்வத்தையும் பரித்தியாகம் பண்ணுவதால்தான் அவர்களைப் போய் நாம் அண்டுகின்றோம். ஏனென்றால் நமக்கும் அந்த ஸ்திதி வரவேண்டுமென்பதற்காக. அதனால் அதுவும் (பிரபுவாக இருத்தல்) ஒரு பெரிய அடையாளமாகாது. பெரிய ஆஸ்பத்திரி கட்டியிருக்கிறார், பெரிய பள்ளிக்கூடங்கள் எல்லாம் கட்டியிருக்கிறார், சமூக சேவையெல்லாம் பண்ணிக் கொண்டு இருக்கிறாரென்றால், பெரிய தனவந்தர் பலரும் பண்ணிக் கொண்டிருக்கின்றனர் அன்றோ? அதற்காக அவர்கள் ஸன்யாஸம் வாங்கிக் கொண்டு வரவில்லையே! அதற்காக இந்த மாதிரி ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபடவில்லையே! அதற்குப் பலர் உலகத்தில் வெள்ளை வேஷ்டி கட்டிக் கொண்டு கிரஹஸ்தராக இருந்து கொண்டே அந்தக் காரியங்கள் எல்லாம் பண்ணலாம்.

ஒரு குருவுக்கு, சத்ரபதி சிவாஜி, சரபோஜி மஹராஜா மற்றும் ஜமீன்தார்கள் ஆகியோர் சிஷ்யர்களாக இருந்திருக்கின்றனர். அது போல், ஒரு குருவிடம், நாட்டின் பிரதம மந்திரி, மற்றும் மந்திரிகள் வந்து செல்கின்றனர். இருந்தாலும், ஆன்மீகத்தைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? அப்பொழுது குருவை ஒருவர் எப்படித் தெரிந்து

கொள்வது என்றால், **மஹாத்மாக்களுக்குத்தான் மஹாத்மாக்களை புரியுமே** தவிர, ஒருக்காலும் சாமான்ய ஜனங்களுக்கு ஒரு மஹாத்மாவின் ஸ்திதியை புரிந்து கொள்ள முடியாது.

இப்படி ஸ்ரீ ரமணரிடம் வந்தவர்கள் எல்லாம் யார் என்றால், இந்த ஸ்ரீ ரமணரை உலகத்திற்குக் காண்பித்துக் கொடுத்தது **ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள்** என்ற பெரிய மஹாத்மா. அந்த சேஷாத்ரி ஸ்வாமிகள் யார் என்று தெரிந்து கொள்ள வேண்டுமில்லையா? அவரைத் தெரிந்து கொண்டாலே, பிறகு ஸ்ரீ பகவான் எப்படிப்பட்டவர் என்று தெரிந்துவிடும்.

*(தொடரும்)*

*தொகுப்பு :* **ஸ்ரீ முரளீதர தாஸன்**

---

***குழந்தைகளுக்குத் தாயின் அரவணைப்பும் அன்பும் அதிகமாகத் தேவைப்படுகின்றன. வளர வளர, குழந்தை தானாகவே நெருக்கத்தைக் குறைத்துக் கொள்கின்றது. அதுபோல ஆரம்பத்தில் ஸாதகனுக்கு குருவின் ஸமீபமும் நெருக்கமும் அதிகம் தேவை. ஸாதனையில் முன்னேற்றம் ஏற்பட ஏற்பட, குரு தன்னுடைய நெருக்கத்தைக் குறைத்துக் கொண்டு, அவனை ஸாதனையில் முன்னேற வைப்பார்.***

**- ஸ்ரீ குருஜி முரளீதர ஸ்வாமிகள்**

# செய்திகள்

## டிசம்பர் 3-ந் தேதி
## *திருமழிசையில் கைசிக துவாதசி*

சுமார் 100 பக்தர்கள் ஸ்ரீ குருஜியுடன் இரண்டு பேருந்துகளில் காலை 8 மணியளவில் திருமழிசையை அடைந்தார்கள். வருடா வருடம் கைசிக துவாதசி கட்டளை ஸ்ரீ குருஜியால் நடத்தப்பட்டு வருவதைப் போன்றே இந்த வருடமும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கோவில் பிரகாரங்களைப் பிரதக்ஷிணமாக வந்து நாம ஸங்கீர்த்தனம் செய்யப் பட்டது. பிரம்மஸ்ரீ ஜானகிராம பாகவதர் அவர்கள் 'ஏகாதசி மஹாத்மியம்' பற்றிய உபன்யாஸம் நிகழ்த்தினார். எல்லோருக்கும் பிரசாதம் வினியோகம் செய்யப்பட்டது. சுமார் 2 மணி அளவில் அவரவர் இல்லம் திரும்பினர்.

❀ ❀ ❀

## டிசம்பர் 1-ந் தேதி
## *ஸ்ரீ யோகி ராம் சுரத் குமார் ஸ்வாமிகள் ஜயந்தி*

சென்னை அசோக் நகர் போலீஸ் டிரெயினிங் காலேஜ் குவார்ட்டர்ஸில் அமைந்துள்ள 'Community Hall'ல் திருவண்ணாமலை ஸ்ரீ யோகி ராம் சுரத் குமார் ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது. விழாவில் ஸாது ஸ்ரீ ரங்கராஜன் அவர்களும் ஸ்ரீ குருஜி அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

---

## அறிவிப்பு

சந்தாதாரர்கள், மதுரமுரளி இதழுக்குக் கடிதம் எழுதும்போது, தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு கீழ்க்கண்ட விலாஸத்திற்கு விவரம் எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**மதுரமுரளி, வி. சங்கரன்** (தொலைபேசி எண் 4840527), 5/3, MIG Flats, பி.டி. ராஜன் ரோடு, கே.கே. நகர், சென்னை - 78.



கைசிக துவாதசியன்று, திருமழிசை ஸ்ரீ ஜகன்னாதப் பெருமாள் கோயில் பிரகாரங்களில் நமது மிஷனைச் சேர்ந்த பக்த கோடிகள் நாம ஸங்கீர்த்தனம் பாடிக்கொண்டு வலம் வரும் காட்சி

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

## ஜனவரி 1-ந்தேதி

*'வைகுண்ட ஏகாதசி'* மதுரபுரி ஆஸ்ரமத்தில் கொண்டாடப்படும். காலையில் 'சொர்க்க வாஸல்' திறக்கப்படும். திருமஞ்சனம், பூஜை நிகழ்த்தப்படும். இரவு திவ்ய நாம பஜனை நடத்தப்படும்.

❀ ❀ ❀

## ஜனவரி 7 முதல் 16-ந் தேதி வரை

சென்னை ஸ்ரீ ரமண கேந்திரம் சார்பில் மயிலை ஆர்.ஆர். ஸபாவில் ஸ்ரீ ரமண மஹரிஷியின் ***'அருணாசல அக்ஷர மண மாலை' (தொடர்ச்சி)*** - ஸ்ரீ குருஜி உபன்யாஸம் நிகழ்த்துவார்கள். நேரம் : இரவு 7 மணி முதல் 8.30 வரை

❀ ❀ ❀

## ஜனவரி 11-ந்தேதி

***'கூடாரவல்லி'*** உத்ஸவம் கொண்டாடப்படும்.

❀ ❀ ❀

## ஜனவரி 17 முதல் 22-ந் தேதி வரை

ஸ்ரீ குருஜி *ஹைதராபாத் விஜயம்* - ப்ரவசனம்

❀ ❀ ❀

## ஜனவரி 23 முதல் 30-ந் தேதி வரை

ஸ்ரீ குருஜி *பம்பாய் விஜயம்* - காட்கோபர் ஸ்ரீ பாலாஜி கோவிலில் உபன்யாஸம்.

**மங்களானி பவந்து**

# மதுரமுரளி

Registered as Newspaper in India

R. Dis. 2032/95 — Regd. No. TN/MS/(S)1698

Single Copy Rs. 5/- — Annual Subs. Rs. 60/-

வேணு : 1 — ஜனவரி 1996 — கானம் : 6


நாமது மிஷனின் சார்பில் கொண்டாடப்படும் 1996-ம் வருஷத்திய முக்கியமான சில விசேஷ தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி | 1 : | சர்வ பீஷ்ம வைகுண்ட ஏகாதசி |
| பிப்ரவரி | 17 : | மஹா சிவராத்திரி - வடவாம்பலம் ஸ்ரீ ஆத்ம போதேந்த்ராள் ஆராதனை - 5 கால அபிஷேகம்/பூஜை |
| மார்ச் | 4 : | மாசி மகம் - திருவிடந்தை க்ஷேத்திரத்தில் தீர்த்தவாரி |
| | 28 : | ஸ்ரீ ராம நவமி |
| ஏப்ரல் | 3 : | பங்குனி உத்ரம் - திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதன் திருக் கல்யாண உற்சவம் |
| ஜூன் | 1 : | ஸ்ரீ மஹா பெரியவாள் ஜயந்தி மஹோத்ஸவம் |
| ஜூலை | 2 : | வியாஸ பூஜை |
| செப்டம்பர் | 4 : | ஜன்மாஷ்டமி - மூன்றாவது பிரம்மோத்ஸவம் (பத்து நாள்) ஆரம்பம் |
| செப்டம்பர் | 23 : | புரட்டாசி திருவோணம் - ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் அவதார உற்சவம் |
| நவம்பர் | 10 : | ஐப்பசி ஸ்வாதி - ஸ்ரீ குருநாதரின் திரு நக்ஷத்ரம் ஜயந்தி மஹோத்ஸவம் |
| டிசம்பர் | 7 : | கைசிக துவாதஸி - திருமழிசை ஸ்ரீ ஜகன்னாதப் பெருமாளுக்கு திருவாராதனம் |
| டிசம்பர் | 16 : | தனுர் மாதப் பூஜை ஆரம்பம் (30 நாட்களும்) |
| டிசம்பர் | 20 : | வைகுண்ட ஏகாதசி |


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Madras 600 095 and printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Madras 600 014. Editor : S. Sridhar